Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, NOVEMBER 8, 2024

வெள்ளிக்கிழமை நவம்பர் 08, 2024 | ஒளி: 10 கதிர்: 089 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை

அனைத்துப் பாடசாலைகளும் 13ஆம் திகதி மூடப்பட்டு மீண்டும் 18ஆம் திகதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு நிலையங்களாக செயற்படும் பாடசாலைகள் 12ஆம் திகதி பாடசாலை நிறைவடைந்ததும் தேர்தல் பணிக்காகப் ஒப்படைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# லொஹான் ஜோடிக்கு விளக்கமறியல் நீடிப்பு

சொகுசு வாகனமொன்றை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர்களான லொஹான் ரத்வத்த மற்றும் ராசி பிரபா ரத்வத்த ஆகிய இருவரையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கங்கொடவில பிரதான நீதவான் ருவினி ஜயவர்தன வியாழக்கிழமை(07) உத்தரவிட்டுள்ளார்.

சட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ருவன் குணசேகர, வழக்குத் தொடரின் சார்பில் நீதிமன்றத்தில் விபரங்களை முன்வைத்தார். அதனையடுத்தே இவ்விருவரின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



ஜனாஸா எரிக்கும் போது

# வாப்பா எங்கு இருந்தீங்க

பாறுக் ஷிஹான்

ஜனாஸாக்களை எரிக்கும் போது, நீங்கள் எங்கு வாப்பா இருந்திங்கள், என்று அதாவுல்லாஹ்விடம் கேள்வியெழுப்பியுள்ள 'வி ஆ வண்'( WE ARE ONE ) அமைப்பின் இணைப்பாளர் முகம்மட் ரஸ்மின், உங்களுடைய பாடல், கேலி, கிண்டல் எல்லாம், மக்களிடம் எடுபடாது. நீங்கள், கோட்டாபயவுக்கு கூஜா தூக்குவதற்கு மட்டுமே சரியான ஆள் என்றும் தெரிவித்துள்ளார்.

உங்கள் காமெடியை நாங்கள் ரசிக்கின்றோம் அதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் ஜனாஸா எரிக்கின்ற போது நீங்கள் எங்கே இருந்தீர்கள்.சீலை கட்டிய போராட்டம் எதுக்கு நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? அது உங்களுக்கு கிண்டலா? ஜனாஸாவை எரித்தது உங்களுக்கு கேலியா? என்றும் கேட்டுள்ளார்.

அம்பாறை ஊடக மையத்தில் வியாழக்கிழமை (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த சில நாட்களாகத் தேர்தல் மேடைகளில் வேட்பாளர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் பேசுகின்ற வார்த்தைகள் எம்மால் கேட்க முடிகின்றது.

தொடர்ச்சி P2

# உ/த பரீட்சை நவ.25 ஆரம்பம்

2024 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் 20ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதிப் படிவங்கள் மற்றும் நேர அட்டவணைகள் குறித்த பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், தனியார் விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் மற்றும் கால அட்டவணைகள் தபால் மூலம் அவர்களது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால் மூலம் அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளாத தனியார் விண்ணப்பதாரர்கள், உத்தியோகபூர்வ இணையத்தளமான https://doenets.lk/ இல் நவம்பர் 18ஆம் திகதி முதல் அனுமதி அட்டைகளைப் பதிவிறக்கம் செய்ய முடியும் என பரீட்சை திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# காய்ச்சலால் பெண் மரணம்

மூன்று நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட வடமராட்சி - துன்னாலை கிழக்கு, குடத்தனையை சேர்ந்த 68 வயதுடைய 6 பிள்ளைகளின் தாயார் உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கடந்த 3ஆம் திகதி காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். மறுநாள் 4ஆம் திகதி மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், அன்றிரவே மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.எனினும், அவர் புதன்கிழமை (06) உயிரிழந்தார்.

அவரின் மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.



# "உங்கள் வாக்குகளை சிதறடிக்க வேண்டாம்"

பாறுக் ஷிஹான்

ஒரு நாடு இரு தேசங்கள் இலக்கினை அடைய அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் ஒருமித்து வாக்களிக்காவிட்டால் அரசியல் அநாதைகளாக்கப்படுவர் என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இளைஞர் தலைவரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முதன்மை வேட்பாளருமான புஷ்பராஜ் துசானந்தன், வாக்குகளைச் சிதறடிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு காளி கோவில் வீதியில் தேர்தல் அலுவலகத்தை திறந்துவைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்த தேர்தலில் எமது கட்சிக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு நிச்சயமாக இருக்கின்றது. எமது கட்சி வடக்கு, கிழக்கு உரிமைக்காகத் தொடர்ந்தும் குரல் எழுப்பி வருகின்றது. எமது தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினர் தமிழ்த் தேசிய இருப்புக்கு நேர்மையாகக் குரல் கொடுத்து வருகின்றார்கள். அவரது கரங்களைப் பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இந்த நாட்டின் புதிய ஜனாதிபதியை எவ்வாறு மக்கள் உருவாக்கினார்களோ அதே போன்று இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் புதிய மாற்றங்களை மக்கள் விரும்ப வேண்டும்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் ஒன்று திரண்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியைத் தமிழர்களின் பெரும்பான்மை சக்தியாகக் கொண்ட தலைமைத்துவமாக அங்கீகரிக்க ஒரு வாய்ப்பை தருவார்கள் என்று நம்புகின்றேன்.

தொடர்ச்சி P2



# "ஒரு தடவை சொன்னால் நூறு தடவை சொன்ன மாதிரி"

எஸ்.கணேசன்)

"பொதுத் தேர்தலில் இரண்டாவது பெரிய கட்சி என்ற அந்தஸ்தை மக்கள் எமக்கு வழங்குவார்கள். நுவரெலியா மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை வெல்வது உறுதி." என்று தெரிவித்துள்ள ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க, 'நான் ஒரு தடவை சொன்னால் நூறு தடவை சொன்ன மாதிரி என தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# நற்சான்று பத்திரங்களை கையளித்தனர்

இலங்கைக்கு புதிதாக உத்தியோகபூர்வ நியமனம் பெற்ற இரு தூதுவர்கள் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து தமது நன்சான்றுப் பத்திரங்களை வியாழக்கிழமை (07) கையளித்தனர்.

எகிப்து அரபுக் குடியரசின் தூதுவர் அடெல் இப்ராஹிம்(Adel Ibrahim) மற்றும் ஜப்பான் தூதுவர் இசோமாடா அகியோ (ISOMATA Akio) ஆகியோர் இலங்கைக்கான தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நற்சான்றுப் பத்திரங்களை கையளித்த பின்னர் ஜனாதிபதியுடன் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

# முதுபெரும் எழுத்தாளர் மு.பொ.காலமானார்



இலங்கையின் முதுபெரும் எழுத்தாளர் மு.பொ. (மு.பொன்னம்பலம்) புதன்கிழமை (06) கொழும்பில் காலமானார்.

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் 1939இல் பிறந்த மு. பொன்னம்பலம், ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளராவார். கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனக் கட்டுரைகள் என பல்துறைகளிலும் பங்களித்த இவர், 1950களில் கவிதை எழுதத் தொடங்கினார்.முதல் கவிதைத் தொகுதியான அது 1968இல் வெளிவந்தது. மு.தளையசிங்கம் இவரது சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரின் இறுதிக் கிரியைகள் தொடர்பான தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

# இளம் ஆசிரியர் சடலமாக மீட்பு

எஸ்.கீதபொன்கலன்



புல்மோட்டை மத்திய கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றி வந்த நற்பிட்டிமுனையை பிறப்பிடமாகவும் முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட நூஹு லெப்பை மொகமட் முபீஸ் (28) பாடசாலையில் அவர் தங்கியிருந்த அறையில் இருந்து புதன்கிழமை (06) மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புதன்கிழமை காலை பாடசாலை வரவு பதிவு இயந்திரத்தில் வருகையைப் பதிவு செய்த பின்னர், இவர் வகுப்பறைகளுக்குச் சென்று காலை 10.30 மணி வரை பாடம் நடத்தி உள்ளார். அப்போது தனது இடமாற்றம் தொடர்பாக மாகாண ஆளுநரைச் சந்திக்கத் திருகோணமலை நகரிற்குச் செல்ல உள்ளதாக மாணவர்களுக்குக் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

# கிளப் வசந்த படுகொலை; 20 பேருக்கு விளக்கமறியல்

கிளப் வசந்த என்று அழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 20 சந்தேக நபர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவலை நீதவான் நீதிமன்றம் வியாழக்கிழமை (7) உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் பலத்த பாதுகாப்புடன் கடுவலை நீதவான் நீதிமன்றில் வியாழக்கிழமை (7) முன்னிறுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிளப் வசந்தவின் கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு ஏற்கெனமே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 15 சந்தேக நபர்களும்,

தொடர்ச்சி P2

## தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனம்,

# "5 நாட்களுக்கு உரியதல்ல; 5 ஆண்டுகளுக்கு உரியது"

அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாக எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் சிலர் குற்றம் சுமத்துவதாகக் கூறிய அமைச்சர் விஜித ஹேரத், தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனம் ஐந்து வாரங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட அன்றி ஐந்தாண்டுகளுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்காகவே முன்வைக்கப்பட்டதாகவும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஐந்தாண்டுகளில் பூர்த்தி செய்வதாகவும் சஜித் பிரேமதாச போன்ற சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கூறுவது போன்று ஐந்து வாரங்களுக்குள் நிறைவேற்ற முடியாது எனவும் குறிப்பிட்டார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "ஒரு தடவை சொன்னால் நூறு தடவை சொன்ன மாதிரி"

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஐக்கிய ஜனநாயக குரல் கட்சி ஆதரவாளர்களுக்குக் கட்சியின் அறிமுகம் மற்றும் கொள்கைகளை அறிமுகப்படுத்தும் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஹட்டனில் வியாழக்கிழமை (07) இடம்பெற்றுள்ளது.

இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய ஜனநாயகக் கட்சி ஆரம்பிக்கப்பட்டுக் குறுகிய காலப்பகுதிக்குள் ஆதரவு வலுத்துள்ளது. இதனால்தான் கட்சிக்கு எதிராக சேறு பூசும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நான் நாடாளுமன்றம் வருவதைத் தடுப்பதற்குச் சிலர் நீதிமன்றத்தைக்கூட நாடினார்கள். அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. கட்சியைத் தடை செய்வதற்குரிய ஏற்பாடுகளும் இடம்பெற்றன. அதுவும் வெற்றியளிக்காது.

நாம் பொய்களை கூறவில்லை. உண்மையைக் கூறியே அரசியல் நடத்திவருகின்றோம். அதனால்தான் எமது வழியில் மக்கள் வருகின்றனர். எனவே, எதிர்வரும் 14 ஆம் திகதி எமது கட்சியினரை நாடாளுமன்றம் அனுப்புங்கள். எனக்கு பலமாக இருக்கக்கூடியவர்களை நுவரெலியா மாவட்டத்திலிருந்து அனுப்பு வையுங்கள்.

நுவரெலியா மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை இலக்கு வைத்துள்ளோம். அதில் அனுஷா சந்திரசேகரன் வெற்றிபெறுவது உறுதி. சந்திரசேகரனின் தந்தை, மலையக மக்களுக்கு நிறைய சேவைகளைச் செய்துள்ளார். 35 ஆயிரம் வீடுகளை அமைத்துக்கொடுத்துள்ளார். நல்ல மனிதர்கள்தான் இந்த கட்சியில் உள்ளனர்.

நான் ஒருதடவை சொன்னால் நூறு தடவை சொன்ன மாதிரி, எமது கட்சி வெல்வது உறுதி. பொதுத்தேர்தலில் சிறந்த முடிவு கிடைக்கும். இரண்டாவது பெரிய கட்சி என்ற அந்தஸ்த்து எமக்கே கிடைக்கப்பெறும்" என்றுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய ஜனநாயக குரல் கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க, ஐக்கிய ஜனநாயக குரல் கட்சியின் நுவரெலியா மாவட்ட தலைமை வேட்பாளர் அனுஷா சந்திரசேகரன், ஷான் பிரதீஸ் உட்பட பதுளை மாவட்ட வேட்பாளர் வடிவேல் சுரேஷ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

# "உங்கள் வாக்குகளை சிதறடிக்க வேண்டாம்"

அதற்கு எமது அம்பாறை மாவட்ட மக்களும் ஒரு பங்குதாரர்களாக இருப்பார்கள். எங்கள் மாவட்டத்தின் தமிழர்களின் இருப்புகளைத் தக்க வைக்க வேண்டுமாயின் நிச்சயமாக மக்கள் அனைவரும் ஒரே தரப்புக்கு ஆதரவளிக்க வேண்டும் .

யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் ஆகிவிட்டது. கடந்த காலங்களில் மக்கள் ஒரே தரப்புக்கு மாத்திரம் வாக்களித்து வந்தீர்கள், ஆனால், மக்களின் இருப்பிலோ அல்லது வாழ்க்கையிலே எந்த விதமும் மாற்றமும் நடைபெறவில்லை. குறிப்பாக நமது கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தை அரசியல் மேடைகளுக்காகக் கடந்த 15 வருடங்களாகப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

அத்துடன், ஒரு கணக்காளரைக் கூட அச்செயலகத்திற்கு நியமிக்க வக்கில்லாத ஒரு தரப்பினராகக் கடந்த காலத்தில் இருந்திருக்கிறார்கள். தொடர்ந்தும் மக்களின் உரிமை சார்ந்த பிரச்சனைகளை அவர்கள் அரசியல் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான போலி தேசியவாதிகள் எமது உரிமைகளுடன் விளையாடுகின்றவர்கள் இந்த முறை நிராகரித்து ஒரு மாற்றத்தை நிச்சயமாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு மக்கள் வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# இந்திய வீட்டு உதவி கிராமம் வழங்கிவைப்பு





மொனராகலை மாவட்டத்தின் மெதகம பிரதேச செயலகப் பிரிவில் இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட மாதிரிக் கிராமம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பீ.எம்.பி.அதபத்து தலைமையில் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த கிராமம் தித்தவேல்கிவுல இந்திய மாதிரி கிராமம் என்று பெயரிடப்பட்டுள்ளதோடு இந்த கிராமம் 1.1206 ஹெக்டேயர் (02 ஏக்கர்) பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. வீட்டுடன் ஒரு நபருக்கு 15 பேர்ச்சுக்கு குறையாத காணி வழங்கப்பட்டுள்ளது. கிராமத்தில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 24 ஆகும். நீர், மின்சாரம் மற்றும் உள்ளக வீதி அமைப்பு கொண்ட இக்கிராமத்திற்கு 44,494,678.00 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் ஒரு குடும்பத்திற்கு 05 இலட்சம் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து தலா 1 இலட்சம் ரூபாவும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. உள்கட்டமைப்பு அபிவிருத்திக்காக மின்சார சபை 800,000 செலவையும், குளிரூட்டும் நீர் திட்டத்திற்கு 4,071,328 செலவையும் செய்துள்ளது.

# வாப்பா எங்கு இருந்தீங்க

20ஆவது அரசியல் சீர்திருத்தத்திற்கு கை நீட்டியதன் காரணமாக ஜனாசா எரிக்கப்பட்டது என்று மக்கள் கதைக்கின்றார்கள். ஆனால் அது ஒரு மாபெரும் சட்டம் அதை இவ்விடத்தில் சொல்ல முடியுமா? அதைப் பற்றி மக்களுக்குத் தெரியுமா? என வேட்பாளர் அதாவுல்லாஹ் கேலியாக கேட்கிறார்.

முதலில் நான் ஒன்றை அவரிடம் கேட்க விரும்புகின்றேன். சகோதரர் அதாவுல்லாஹ் முதலில் ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள். இது பாராளுமன்ற தேர்தல் களம். இங்கு சிறந்த நகைச்சுவையாளரை தெரிவு செய்யும் களம் அல்ல. டி.வியின் நிகழ்ச்சி அல்ல. காமெடி நடிகர்களைத் தெரிவு செய்கின்ற ஒரு நிகழ்ச்சி இல்லை என்பதை வேட்பாளர் அதாவுல்லாஹ் புரிந்துகொள்ள வேண்டும்.

இப்போது சிலருக்குப் பொழுது போக்கிற்கு அதாவுல்லாஹ்வின் காணொளிகளைப் பார்த்தால் போதும் என்ற நிலை மாறி இருக்கிறது. பாராளுமன்ற வேட்பாளர் மாதிரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாதிரி ஒரு கட்சியினுடைய தலைவர் மாதிரி நடந்து செயல்படுகின்றீர்களா? நீங்கள் பேசுகின்ற இவ்வாறான பேச்சுக்கள் இளைஞர்களைக் கவர்கின்றது என்று நினைக்கின்றீர்களா? என்று கேட்கின்றேன்.

ஆனால், கொமெடிக்காக இளைஞர்கள் இந்த பேச்சுக்களைக் கேட்கின்றார்கள். தேர்தல் காலத்தில் இது நல்லா இருக்கும். அதாவுல்லாஹ் பேச்சைக் கேட்டுவிட்டுப் போவோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அதாவுல்லாஹ் நீங்கள் பெரிய அறிவாளி என்று இங்கு யாரும் உங்கள் பேச்சைக் கேட்கவில்லை. குறிப்பாக 20க்கு கையை தூக்கியது மாபெரும் ஒரு சட்டம் அது . உங்களுக்குத் தெரியுமா என்று கேட்கிறீர்களே அந்த சட்டத்தைப் பற்றி நாங்கள் உங்களுக்குப் பாடம் நடத்த வேண்டுமா என்று கேட்கின்றோம்.

இவ்வாறானவர்களின் இலட்சணங்களை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எமது தலைவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று தெரியுமா? மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கின்ற வேளை தனக்கு இருக்கின்ற அதிகாரம் போதாது. மேலதிக அதிகாரம் வேண்டும் என்று 17க்கு பிறகு 18ஆவது அரசியல் சீர்திருத்தத்தைக் கொண்டு வருகிறார்கள். அதற்கும் எம்மவர்கள் கை தூக்கினார்கள். தொடர்ந்து 18ஆவது அரசியல் சீர்திருத்தத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்தவர் அதிகாரத்தைக் குறைக்கப் போகின்றேன் என்று கூறி 18ஆவது அரசியல் சீர்திருத்துதற்குப் பதிலாக 19 ஆவது சட்டத்தை மைத்திரி என்பவர் கொண்டு வந்தார். அதற்கும் எம்மவர்கள் கை தூக்கினார்கள்.

தொடர்ந்து மேலதிக அதிகாரம் வேணும் குறைந்த அதிகாரம் தேவையற்றது என கூறி 20 அரசியல் சீர்திருத்தத்தை வலியுறுத்தி கோட்டபாய ராஜபக்ஷ கொண்டு வந்தார். 20ஆவது அரசியல் சீர்திருத்தம் அதற்கும் எம்மவர்கள் கை தூக்கினார்கள்.

எமது கேள்வி யாதெனில் நீங்கள் கடந்த தேர்தல் மேடைகளில் எதைச் சொல்லி வாக்கு கேட்டீர்கள். கோட்டாவை எப்படிக் காட்டினீர்கள் இப்போது கோட்டபாய ராஜபக்ஷவினை எப்படிக் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட ஒருவருக்கு 20ஆவது அரசியல் சீர்திருத்தம் என்ற பேரில் அனைத்து அதிகாரத்தையும் தூக்கி கையில் கொடுத்தால் என்ன பண்ணுவார். பேயாட்டம் ஆடுவார். நாடு நடுத்தெருவுக்கு வந்து நிற்கும் என படித்தவர்கள் சொன்னார்கள் அழுது புலம்பினார்கள் கெஞ்சிக் கேட்டார்கள் அல்லவா?

இவ்விடயம் அதாவுல்லாஹ்க்கு புரியவில்லையா? என்றும் வினவியுள்ளார்.

# கிளப் வசந்த படுகொலை; 20 பேருக்கு விளக்கமறியல்

நீதிமன்ற உத்தரவின் கீழ் 03 மாத காலம் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த 05 சந்தேக நபர்களுமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 08ஆம் திகதி அத்துருகிரிய பிரதேசத்தில் உள்ள பச்சை குத்தும் நிலையம் ஒன்றின் திறப்பு விழாவின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கிளப் வசந்த உட்பட இருவர் உயிரிழந்துள்ளதுடன் பிரபல பாடகியான கே. சுஜீவா உட்பட 4 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# மகளை வன்புணர்ந்த முறைபாடு பொய்

சுமணசிறி குணதிலக்க

மொனராகலை-தம்பகல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகலங்கொடுவ அலுகல்கே மரியஅரவ பிரதேசத்தில் வசிக்கும் பதினொரு வயதுடைய தனது மகளைத் தந்தை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியமை தொடர்பான கிடைக்கப்பெற்ற முறைப்பாடு பொய்யானது என பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த மாதம் 30ஆம் திகதி தொலைபேசி மூலம் தந்தை தனது மகளை வன்புணர்ந்ததாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதன்படி, சிறுமியிடம் கேட்டபோது, அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

மேலும், பொலிஸார் சிறுமியை மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் நிபுணர் சட்ட வைத்தியரிடம் முன்னிறுத்தியபோது,

அங்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் சிறுமி வன்புணர்வு செய்யப்படவில்லை என தெரியவந்துள்ளது.

சிறுமியின் தாய் மூன்று பிள்ளைகளையும் விட்டுச் சென்ற நிலையில், தந்தை கூலி வேலை செய்து மூன்று பிள்ளைகளையும் பராமரித்து வந்துள்ளார்.



# லொஹான் ஜோடிக்கு விளக்கமறியல் நீடிப்பு

வாகன மோசடி குற்றச்சாட்டின் கீழ் ஒக்டோபர் 31ஆம் திகதியன்று கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, நவம்பர் 7ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பத்து நாட்களுக்குப் பின்னர், தன்னுடைய சட்டத்தரணியின் ஊடாக ராசி பிரபா ரத்வத்த, திங்கட்கிழமை (04) ஆஜரானார். இதன்போதே, நுகேகொடை கங்கொடவில பிரதான நீதவான் ருவினி ஜயவர்தனவின் உத்தரவின் பேரில், 7ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவ்விருவரும், நுகேகொடை கங்கொடவில பிரதான நீதவான் ருவினி ஜயவர்தனவின் முன்னிலையில், வியாழக்கிழமை (07) நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட போதே, அவ்விருவரின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டுள்ளது.

# "5 நாட்களுக்கு உரியதல்ல; 5 ஆண்டுகளுக்கு உரியது"

மேலும், "நாங்கள் இன்னும் பல முடிவுகளை எடுக்க வேண்டும். ஐந்தாண்டுகளுக்காகத் திட்டமிடப்பட்ட ஒரு பணியை ஐந்து வாரங்களுக்குள் முடிக்க முடியாது. தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனம் ஐந்தாண்டுகளுக்குள் நிறைவேற்றப்பட முன்வைக்கப்பட்டதே தவிர, ஐந்து வாரங்களில் அல்ல. நாங்கள் இன்னும் அரசாங்கத்தையே அமைக்கவில்லை. கடந்த ஐந்து வாரங்களுக்குள் அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் முக்கிய முடிவுகளை நாம் எடுத்துள்ளோம். அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என எதிர்க்கட்சி பகல் கனவு காண்கின்றது.

நூற்றுக்கணக்கான அமைச்சர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறியதாகவும், இறுதியில் நாட்டை திவாலான நிலைக்குத் தள்ளியுள்ளதாகவும், தற்போது மூன்று அமைச்சர்கள் மட்டுமே நாட்டை இயக்குவதாகவும் நாங்கள் இப்போது ஒரு புதிய பாதையில் பயணிக்கிறோம் என்பதை நாங்கள் காட்டியுள்ளோம். பொருளாதாரம் திவாலாவதற்கு முக்கிய காரணம் ஊழல் மிகுந்த அரசியல் கலாச்சாரம், மோசடிகள், ஊழல் மற்றும் விரயம் தான்" என்றும் அவர் மேலும் கூறினார்.

# இளம் ஆசிரியர் சடலமாக மீட்பு

இந்நிலையில், பாடசாலை முடிவடைந்த பின்னர் மாலை 3.30 மணிவரை வெளியேறுவதற்கான பதிவை இயந்திரத்தில் இவர் பதிவு செய்யவில்லை.

இதே வேளை இவரது மனைவி தமது கணவருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட போதும், பதில் இல்லை,எனவே எங்கே எனது கணவர் உள்ளார் என்று பாடசாலை அதிபருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு வினவியுள்ளார்.

இதை அடுத்து அதிபர் மற்றும் ஆசிரியர்கள், ஆசிரியர் தங்கியிருந்த அறைக்குச் சென்று பார்வையிட்ட போது, அவர் உயிரற்ற நிலையிலும், உள்ளாடை மற்றும் காற்சட்டை என்பன அவிழ்ந்த நிலையிலும், கால்களில் இரத்த காயங்களுடனும் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் புல்மோட்டை பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த நீதவானின் உத்தரவிற்கு இணங்க சடலம் சட்ட வைத்திய மரண பரிசோதனைக்காக முல்லைத்தீவு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# வெலிமடை விபத்தில் சீன பிரஜை காயம்

வெலிமடை- நுவரெலிய வீதியில் வெலிமடை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வியாழக்கிழமை (07) காலை ஓட்டோவும், லொறியும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டோ சாரதியான சீன பிரஜை (வயது 36) காயமடைந்துள்ளார்.

காயமடைந்த குறித்த நபர் வெலிமடை ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாவில் இருந்து பயணித்த ஓட்டோ, வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வெலிமடை பக்கம் இருந்து நுவரெலியாவுக்கு பயணித்துக்கொண்டிருந்த லொறியுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது. சம்பவம் தொடர்பாக விசாரணைகளை வெலிமடை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.



# மு.கா. தேர்தல் அலுவலகம் மீது தாக்குதல்; ஒருவர் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் அக்கட்சியின் தலைமை வேட்பாளரான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காத்தான்குடி ரிஸ்வி நகர் முதலாம் வட்டாரம் ஓடாவியார் வீதியில் அமைந்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்றத் தேர்தல் தலைமை வேட்பாளர் ஹிஸ்புல்லாவின் அலுவலகத்தின் மீதே வியாழக்கிழமை (07) அதிகாலை குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அலுவலகத்துக்கு முன்பாக போடப்பட்டிருந்த பெரிய அளவிலான பதாதைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன், அங்கு ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளும் கிழித்து வீசப்பட்ட நிலையில் இருந்துள்ளன.

இது தொடர்பாக மற்றுமொரு கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் சிலர் தேடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு 12 மணியளவில் அலுவலகத்தில் உள்ள கட்சியின் ஆதரவாளர்கள் உரையாற்றிக் கொண்டிருந்தபோது அலுவலகத்திற்கு வெளியில் மேற்படி தாக்கல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் வெளியே வந்து பார்த்தபோது சம்பந்தப்பட்டவர்கள் தப்பியோடி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஹட்டனில் சிரமதானம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டனில் குடியிருப்பாளர்களின் சுற்றுத்தொகுதியில் காணப்பட்ட குப்பைகள் மற்றும் திண்மக் கழிவுகள் அகற்றும் வேலைத்திட்டம் வியாழக்கிழமை (07) முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன்-டிக்கோயா நகரசபை, ஹட்டன் பொலிஸ் மற்றும் மாநகரசபையின் சுகாதார திணைக்களம் ஊழியர்கள் இணைந்து குறித்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

### தமிழ் பிரதிநிதித்துவத்தை

# “நிச்சயம் வெல்வோம்”

■ எஸ்.கணேசன்

“மலையக மக்களை அரசியல் அநாதைகளாக்குவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். நிச்சயம் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை வென்றெடுப்போம்.” என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஐக்கிய ஜனநாயக குரல் கட்சி ஆதரவாளர்களுக்கு கட்சியின் அறிமுகம் மற்றும் கொள்கைகளை அறிமுகப்படுத்தும் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஹட்டனில் புதன்கிழமை(07) இடம்பெற்றுள்ளது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



“பொதுத்தேர்தலில் நான் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடத் திட்டமிட்டிருந்தேன். ஆனால், எமது பதுளை மாவட்ட மக்கள் என்னை விடவில்லை. மக்கள் பிரதிநிதித்துவத்தைக் காக்க நான் அங்குப் போட்டியிடுகின்றேன்.

எனது மகனை நுவரெலியாவுக்கு அனுப்பிவைத்துள்ளேன். அவரையும், இளம் பெண் வேட்பாளர் அனுஷா சந்திரசேகரனையும் நிச்சயம் பாராளுமன்றம் அனுப்பி வையுங்கள். மற்றுமொரு தொப்புள் கொடி உறவையும் அனுப்புங்கள். நுவரெலியா மாவட்டத்தில் இருந்து மொத்தம் மூவரை அனுப்பி வையுங்கள்.

அதுமட்டுமல்ல, பதுளை மாவட்டத்தில் இருந்து எமது சின்னத்தில் மூன்று தமிழர்கள் பாராளுமன்றம் செல்வதைத் தடுக்க முடியாது. இங்குள்ள அனைவரும் எனது உறவுகள்தான். மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு சதி நடக்கின்றது. இதனை என் உடன் பிறப்புகள் முறியடிக்க வேண்டும்.

அத்துடன், என்னுடைய மக்களை அரசியல் அநாதைகளாக்குவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். நாம் மாபெரும் சக்தியாக வருவோம். மலையக மக்களை எவரும் குறைவாக எடைபோடக்கூடாது. புதிய சின்னம், புதிய தலைமைத்துவத்தின்கீழ் வந்துள்ளோம். எமது பின்னால் அணிதிரளுங்கள். “ஆடுற மாட ஆடிதான் கறக்கனும், பாடுற மாட பாடிதான் கறக்கவேண்டும்” என்று கூறிய அவர், என் மக்களின் காணியைப் பிடிக்க விடமாட்டேன் என்றும் தெரிவித்துள்ளார்”

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய ஜனநாயக குரல் கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க, ஐக்கிய ஜனநாயக குரல் கட்சியின் நுவரெலியா மாவட்ட தலைமை வேட்பாளர் அனுஷா சந்திரசேகரன், ஷான் பிரதீஸ் உட்பட பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

## 85 வர்த்தகர்களுக்கு அபராதம்

■ எம்.எஸ்.எம்.ஹனீபா

அம்பாறை மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி, வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 85 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் அபராதம் ஒக்டோபரில் மட்டுமே விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார, வியாழக்கிழமை (07) தெரிவித்தார்.

பொத்துவில், அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, அம்பாறை, மற்றும் தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் கட்டுப்பாட்டு விலையை மீறி, கூடுதலான விலைக்குப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து, மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரமவின் அலோசனைக்கமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அத்தியவசியப் பொருட்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் கூறினார்.

அத்தியவசிய பொருட்களை கூடுதலான விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக பொது மக்கள் 1977ஆம் இலக்கத்திற்கு அல்லது மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் 0632222355 எனும் இலக்க தொலைபேசி இலக்கத்திற்கு தகவல்களை வழங்குமாறும் அறிவித்தள்ளார்.

## ஆசிரியைகளுக்கு கௌரவம்



களுத்துறை-அகலவத்தை, டார்டன்பீல்ட் பகுதியில் இயங்கிவரும் கணபதி அறநெறி பாடசாலை ஆசிரியைகளுக்குத் தன்னார்வ பணிகளைக் கௌரவிக்கும் முகமாக ஆசிரியர்களுக்குக் கௌரவ நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

சமூக சேவகர் முத்துலிங்கம் துரைராஜாவின் ஒருங்கமைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கணபதி அறநெறி பாடசாலையின் நிறுவனர் சதாசிவம் உதயசாந்தன் அறநெறி ஆசிரியர்களுக்கு நினைவுச் சின்னங்களை வழங்கியுள்ளார்.

இந்த சிறப்புக் கௌரவிப்பு நிகழ்வில், சமூக தன்னார்வலர்கள், ஆன்மீகவாதிகள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டோருடன் பெருந்திரளானோர் கலந்து கொண்டுள்ளனர்.



# சின்னாபின்னமாக போகும் சிறுபான்மை பிரநிதித்துவம்

புதிய பாராளுமன்றத்துக்கான தேர்தல், எதிர்வரும் 14ஆம் திகதியன்று இடம்பெறவிருக்கின்றது. ஆக வாக்களிப்புக்கு இன்னும் ஆறு நாட்கள் மட்டுமே இருக்கின்றன. இறுதி வாரம் என்பதால், தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், நாட்டில் தேர்தலொன்று நடைபெறுகின்றதா? என தங்களால் உணர முடியாமல் உள்ளதெனப் பலரும் கூறுகின்றனர். அந்தளவுக்குப் பிரசாரங்கள் முழு வீச்சில் முன்னெடுக்கப்படவில்லை.

பலமான அரசாங்கமொன்றை அமைப்பதற்கான அதிகாரத்தை தங்களுக்குத் தாருங்கள் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கோருகின்றது. தங்களால் ஆட்சியமைக்க முடியுமென்றும் அதற்கான அதிகாரத்தை தங்களுக்குத் தாருங்கள் என்று சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் அதிகாரத்தைக் கேட்கிறது.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி, தங்கள் குழுவிலேயே அனுபவமிக்கவர்கள் உள்ளனர். ஆகையால், தங்களுக்கு வாக்களியுங்கள் என கோருகின்றனர். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், பாராளுமன்ற அதிகாரத்தை தங்களுக்குக் கேட்கிறது.

இதற்கிடையே, வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில் போட்டியிடும், தமிழ், முஸ்லிம் கட்சிகள் அல்லது கூட்டணிகள். பாராளுமன்றத்தில் சிறுபான்மை இனங்களுக்காகக் குரல்கொடுப்பதற்காக தங்களுடைய பிரதிநிதிகளை அனுப்பிவைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறுபான்மை பிரதித்துவம் தொடர்பில் பொதுவாக நோக்குமிடத்து, இம்முறை சின்னாபின்னமாகும் என்பதில் ஐயமில்லை. போட்டியிடும் பழைய முகங்களில் சில முகங்களை புதிய பாராளுமன்றத்தில் காணமுடியாமல் போகலாம் என்றும் பலரும் கூறுகின்றனர்.

அதிகாரம் கிடைக்கும் போது, மக்களுக்கு சேவைகளை முறையாகச் செய்து, ஏமாற்றும் வாக்குறுதிகளை வழங்காது, செயற்படுத்தக்கூடிய வாக்குறுதிகளை வழங்கி, அதனை நிறைவேற்றியிருந்தால், மக்கள் மத்தியில் சென்று, தமிழர்களுக்காக அல்லது முஸ்லிம்களுக்காக குரல்கொடுப்போம். முழுமையாக இல்லாமற் செய்வதற்கான சதி இடம்பெறுகின்றது என்றெல்லாம் புலம்பத்தேவையில்லை.

அதுமட்டுமன்றி, வாக்கு வங்கியைக் காட்டிக்காத்திருந்தால், பொதுத் தேர்தலுக்கு மட்டுமன்றி, ஏனைய தேர்தல்களுக்கும் அஞ்சவே தேவையில்லை. சிறுபான்மை இன கட்சிகள் போட்டியிடும் மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களைப் பார்த்தோமெனில், அங்கு உட்கட்சி பூசல்களும், ஏனைய கட்சிகளில் போட்டியிடும், சிறுபான்மையின வேட்பாளர்களுக்கு வாக்குகள் கிடைத்துவிடக்கூடாது என்பதுமே பிரதான பிரசார தொனிப்பொருளாக உள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து, பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தப்போவதாக அறிவித்துள்ள அரசாங்கம், விரும்பினால், மாகாண சபைத் தேர்தலையும் நடத்தக்கூடும். எனினும், இந்தத் தேர்தல்களில் எல்லாம் போட்டியிடுவதற்கு, சிறுபான்மை இனக் கட்சிகள் இப்போது இருந்து தயாரில்லை என்பது, பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களில் புலம்புவதில் இருந்தே அறிந்துகொள்ள முடிகின்றது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் அல்லது பலரின் சுயமதிப்பை உடைப்பதற்கு என்றே சில விசமிகள் காத்திருக்கின்றார்கள். பொறாமை காரணமாக, பிறர் பற்றி அவதூறு பேசுவதையே குறியாகக் கொண்டிருப்பவர்கள் சமூக விரோதிகளாவர். ஷ

வேண்டுமென்றே அபாண்டமான செய்திகளைப் பரப்புவது, பிறர் குடும்ப விடயங்களில் தலையிடுவது, வதந்தி பரப்புவது, எல்லாமே நடந்தபடிதான் இருக்கும். செவிகளைக் கண்டபடி நகர்த்தலாகாது. எல்லா விதமான மாந்தர்களும் எங்கள் முன்னால் உலாவருகின்றார்கள்.

எவருடன் நட்புக் கொள்வது? எவரைக் கண்டுகொள்ளாமல் விடுவது என்பதை உங்கள் அனுபவ ஞானம் மூலம் கண்டுகொள்ள முடியும். காலங்களைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். மனிதன் மனிதனையே விழுங்குகின்ற காலம் இது. தங்கள் சுயநலத்துக்காக எதையும் செய்வார்கள்.

ஒருவரின் ஆளுமைகளை அனுபவங்களே சொல்லிக் கொடுக்கின்றன. இயற்கையாகவே மனிதர்களுக்குப் புத்தி உண்டு; சிந்திக்கும் திறனும் உண்டு. நிதானம், ஆராய்வு, செயல் மாந்தர்களுக்குப் பிரதானமானது.

நன்றி-பருத்தியூர் பாலவயிரவநாதன்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 25

# அபிவிருத்தி வழி சமாதானம் -3

இலங்கையின் சமாதான முயற்சிகள் 2006இல் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில், அதனைத் தொடர்ந்த சமாதானத்திற்கான கதையாடல் அபிவிருத்தியில் இருந்து பாதுகாப்பு நோக்கியதாக மாறியது.

இதில், அமெரிக்காவின் 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்' முக்கிய பங்கு வகித்தது. 9/11 க்கு முன்னர், உலகளாவிய தெற்கில் உள்ள அரசுகளுக்கு இடையேயான மோதல்கள் அபிவிருத்திக்குத் தடையாகக் காணப்பட்டன. ஆனால், அவை தாராளவாத உலக ஒழுங்கிற்குள் ஆதிக்கம் செலுத்தும் அரசுகளுக்குப் பாதுகாப்பு பிரச்சினைகளாக அரிதாகவே கருதப்பட்டன. 9/11க்குப் பிறகு இந்த நிலைமை மாறியது.

சர்வதேச இடம்பெயர்வு, குற்றவியல் வலைப்பின்னல்கள் மற்றும் பயங்கரவாதம் மூலம் இவ்வகைப்பட்ட விளைவுகள் பரவலாம் என்ற அச்சம், அரசுகளுக்கு இடையேயான மோதல்களை உலகளாவிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களாக மாற்றியது.

ஆயுதமேந்திய கிளர்ச்சிகள் பரவலாக்கப்பட்ட பயங்கரவாத வலைப் பின்னல்களாகக் குறிப்பிடப்படுகின்றன. அவை கொரில்லா மற்றும் பயங்கரவாத தந்திரங்களைப்

பயன்படுத்துகின்றன. பயத்தின் மூலம் அதிகாரத்தைச் செலுத்துகின்றன மற்றும் வளங்களைத் திரட்டுதல் மற்றும் படையை நிலைநிறுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் உலகளாவிய ரீதியிலானவையாக உள்ளன.

இந்த வாதங்கள் அடிப்படையில் கிளர்ச்சிகளைப் பற்றிய புரிதலைக் குறைகளை அடிப்படையாகக் கொண்ட போராட்டங்களிலிருந்து பேராசை சார்ந்த பயங்கரவாதத்திற்கு மாற்றுகிறது.

எனவே, மோதலைத் தீர்ப்பதற்கான பல்வேறு பரிந்துரைகளுக்கு வழிவகுக்கிறது. இது இரண்டு வகையான கதையாடல்களாக கட்டமைக்கப்பட்டன. முதலாவது, அரசியல் பேச்சுவார்த்தைகள் மற்றும் தாராளவாத அமைதியைக் கட்டியெழுப்புவதன் மூலம் மோதல்களைத் தீர்ப்பதற்கான சட்டப்பூர்வத்தன்மையை வழங்குகின்றன.

இது கிளர்ச்சி இயக்கங்களின் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் என்ற அனுமானத்தின் கீழ் கட்டமைக்கப்பட்டன. இரண்டாவது, பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் அரச பாதுகாப்பு மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கும் ஆயுதமேந்திய தலையீடுகளை ஆதரிக்கிறது.

உலகளாவிய தெற்கில் உள்ள அரசுகளுக்கு இடையேயான மோதல்கள் தொடர்பாகப் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

மேம்பாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என்பது, பல அரங்காடிகள் (அரசுகள், பலதரப்பு நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ஆயுதப் படைகள் போன்றவை) அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான மாற்றங்களின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் 1990களின் பிற்பகுதியில் இருந்து உதவியின் பாதுகாப்பு மயமாக்கல்/ பல்வேறு பேரங்காடிகளுக்குத் தனித்துவமான இடங்களை வழங்கியதை அவதானிக்கலாம். இலங்கையின் முக்கிய நன்கொடையாளர்கள் தாராளவாத சமாதானத்தை உருவாக்குவதற்கும், போருக்குப் பிந்தைய நவதாராளவாத வளர்ச்சியைச் சீராக்குவதற்குமான ஒரு முயற்சியில் ஒன்றிணைந்தனர்.

உதாரணமாக, இலங்கையின் மிகப் பெரிய உதவி நன்கொடையாளர் ஜப்பான், சமாதானம் தொடர்பான கேள்விகளுக்கு ஒப்பீட்டளவில் பலவீனமான தொடர்புகள் மற்றும் உதவிக்கு அரசியல் நிபந்தனைகளைப் பயன்படுத்துவதில் ஒரு குறிப்பிட்ட தயக்கம் ஆகியவற்றுடன் தொழில்நுட்ப அரசுக்கும் அரசுக்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பின் மூலோபாயத்தை பின்பற்றுகிறது என்பதைக் கவனத்தில் கொள்ளலாம்.

மற்ற நன்கொடை நாடுகள், குறிப்பாக நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம், சமாதானத்தை எளிதாக்குவதற்கு முன்னுரிமை அளித்து, இந்த இலக்கை ஆதரிக்கும் வகையில் வளர்ச்சி உதவிகளைக் கருவியாகக் கொண்டிருந்தன.

இறுதியாக, அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகியவை இந்தியப் பெருங்கடலில் தங்கள் பொருளாதார மற்றும் பாதுகாப்பு நலன்களின் அடிப்படையில் அரச இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை பற்றிய கேள்விகளில் அதிக அக்கறை கொண்டிருந்தன.

இந்த அணுகுமுறையானது மீண்டும் யுத்தம் மற்றும் குறிப்பாகப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பதற்கான அரசாங்கத்தின் பிரச்சாரத்துடன் முக்கியத்துவம் பெற்றது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நோர்வே தலைமையிலான தாராளவாத அமைதி அணுகுமுறையைச் சுற்றி இணைத் தலைவர்களிடையே ஒரு ஒருங்கிணைப்பு ஏற்பட்டபோது, இது சமாதான முன்னெடுப்பிற்கு முரணாக இருந்தது.

ஆனால், இதைப் பலரும் கவனிக்கத் தவறினர். இதே நாடுகளே மோதலின் இறுதிக் கட்டத்தில் நாட்டின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று தமது சமாதான பாதையை வேறுதிசையில் திருப்பியது வியக்கத்தக்கதல்ல. இலங்கையின் 5வது சமாதான முன்னெடுப்புகளில் அபிவிருத்தி செயற்பாடுகள், சர்வதேச பாதுகாப்பு பிரச்சினைகளை ஒப்பீட்டளவில் கொண்டதாக இருக்கவில்லை.

இது, புலிகள் அமெரிக்காவுக்கோ அல்லது இலங்கைக்கு வெளியில் உள்ள மற்ற முக்கிய அரங்காடிகளுக்கோ ஒரு பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலாகப் பார்க்கப்படவில்லை என்பதையும், ரணில் விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி (ஐ.தே.மு.) கூட்டணியின் தேர்தல் வெற்றி அமெரிக்க நட்பு சந்தை தாராளவாதத்திற்கு நல்ல வாய்ப்புகளை உருவாக்கியது என்பதையும் இது பிரதிபலிக்கிறது.

இது ஒரு பேச்சுவார்த்தை மூலம் தாராளவாத அமைதிக்கான விருப்பத்தைத் தொடர ஒரு தனித்துவமான வாய்ப்பை உருவாக்கியது. இதன் மூலம் இலங்கையை சர்வதேச மயமாக்கப்பட்ட தாராளவாத சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான சோதனைக் களமாக மாற்றியது.

ஐ.தே.மு. அரசாங்கத்தின் நவதாராளவாத சமாதான அணுகுமுறை மற்றும் அதன் தொழில்நுட்ப வரைபடமானது வலதுசாரி அரசியல் சூழற்சியுடன் சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் மீள் எழுச்சிக்கான அடித்தளத்தை வழங்கியது.

இந்த வலதுசாரி தேசியவாத சக்திகளின் கூற்றுப்படி, வெளி அரங்காடிகளின் நவ-ஏகாதிபத்திய பொருளாதார மற்றும் அரசியல் திட்டத்தில் ஐ.தே.மு உடந்தையாக இருப்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. சந்தேகத்திற்கு இடமின்றி, இந்தக் கருத்துக்கள் சிங்கள அரசியலில் பெரும்பான்மையினரின் கவனத்தை ஈர்த்தது. அவர்களின் நீண்டகால மேற்கு-எதிர்ப்பு தேசியவாதத்தை மீண்டும் தூண்டியது. இது அவர்களின் சிங்கள-பௌத்த மேலாதிக்க அரசியல் திட்டத்தை நியாயப்படுத்த உதவியது மற்றும் ஐ.தே.க. தலைமையின் தொடர்ச்சியான வர்க்க மற்றும் கருத்தியல் சார்புகளை நியாயப்படுத்த உதவியது.

உள்நாட்டு அரசியல் விமர்சகர்கள் ஐ.தே.மு. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நவதாராளவாத சமாதான கட்டமைப்பைக் கண்டிக்கும் உலகளாவிய அறிஞர்களின் கருத்துருவாக்கங்களால் ஈர்க்கப்பட்டனர்.

இலங்கையின் மோதலைத் தீர்ப்பதற்குச் சர்வதேச பலதரப்பு நிறுவனங்களால் முன்மொழியப்பட்ட புதிய நிறுவன ஏற்பாடுகளை ஆதரிப்பது தீங்கு விளைவிப்பதாகவும், அரசின் இறையாண்மையை குறை மதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் அவர்கள் வாதிட்டனர்.

இந்த அறிவார்ந்த விமர்சனங்கள் உள்ளூர் தேசியவாதிகளுக்கு சிங்கள-பௌத்த தேசியவாதம், கொலனித்துவத்துவத்திற்குப் பிந்தைய தேசிய சுயநிர்ணயம் மற்றும் நவ-காலனித்துவ எதிர்ப்பை நியாயப்படுத்துவதற்கு அதிகமான ஆயுதங்களை வழங்கின.

பிரதமர் விக்ரமசிங்கவின் பொருளாதார அபிவிருத்தி முன்மொழிவு ஒட்டுமொத்த சமாதான திட்டமான 'இலங்கையை மீட்பது' என்பது அரசியல் மற்றும் பொருளாதாரத் திட்டத்துடன் இணைந்த நவதாராளவாத சமாதான கட்டமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

இதனுடைய அடிப்படைப் பலவீனம் என்பது, இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்ட சர்வதேச நிறுவனங்களிடம் (இன்னும் சரியாகச் சொல்வதாயின் அமெரிக்க ஒழுங்குப் பிரகாரம் செயற்படும் அமைப்புகள் - (Washington consensus) உள்ளூர் சமூகங்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகள் குறித்த தெளிவாக உணர்திறன் இருக்கவில்லை. எனவே, இவர்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் மக்களின் தேவைகளுக்குமிடையில் எட்டமுடியாத இடைவெளி இருந்தது. இந்நிலைமை இலங்கையின் வடக்குக் கிழக்குக்கு மட்டுமன்றி தென்பகுதிக்கும் உரியதாக இருந்தது.

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள், சமாதானம், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பாக இருதரப்பு மற்றும் பலதரப்பு உதவி நன்கொடையாளர்களிடையே மாறிவரும் கதையாடல்கள் மற்றும் உத்திகளை மட்டும் பிரதிபலித்தது. சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்.

நவதாராளவாத வளர்ச்சி, தேசியப் பாதுகாப்பு மற்றும் தாராளவாத அமைதி ஆகியவற்றின் சர்வதேச புவிசார் அரசியலைப் போலவே உள்நாட்டு இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளால் சமாதான செயல்முறையின் வடிவமைப்பு மற்றும் விளைவு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை இது தெளிவாகக் காட்டியது.

இக்காலப்பகுதியில் இலங்கையில் அரச மற்றும் சந்தைச் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்ட சூழ்நிலையின் அரசியலை ஆராயும் போது, தாராளவாத சமாதானத்திற்கும் சிங்கள மற்றும் தமிழ் தேசியவாதங்களுக்கும் இடையிலான பதட்டங்கள் முக்கியமானவை. ஏனெனில், சமாதான முன்னெடுப்புகள் குறிப்பாக மூன்று உள்நாட்டு முன்நிபந்தனைகளால் தாக்கத்திற்கு உள்ளானது,

(1) புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இராணுவ-பிராந்திய அதிகார சமநிலை,

(2) அரசியல் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான அரசியலமைப்பு ரீதியானதும் அரசியல் நிலைமைகளாலும் ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகள்,

(3) போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிறைவேற்றப்படாத மனிதாபிமான தேவைகள் மற்றும் பொதுவாக மெதுவான மற்றும் சீரற்ற பொருளாதார வளர்ச்சியின் வடிவத்தில் அபிவிருத்தி நெருக்கடி. இவை மூன்றையும் விரிவாக அடுத்த கட்டுரையில் பார்க்கலாம்.

## கடிதங்கள்

### அதிபர் விடுதியை பாருங்கள்

ஹட்டன் கல்வி வலயம், கோட்டம் இரண்டுக்கு உட்பட்ட பொகவந்தலாவ பிரதேசத்தில் இயங்கும் பாடசாலை ஒன்றுக்கு சொந்தமான அதிபர் விடுதி ஒன்று நீண்ட காலமாகப் பராமரிப்பு இன்றி கவனிப்பார் அற்ற நிலையில் காணப்படுகின்றது.


இந்த பாடசாலைக்கு சொந்தமான இந்த அதிபர் விடுதி சுற்றி காடுகளாகக் காட்சியளிப்பதாகவும் இந்த கட்டிடம் குறித்து உரிய அதிபர் கண்டு கொள்ளுவதில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க நிதியுதவியில் அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பில் ஹட்டன் வலய கல்விப் பணிமனை மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் செயலாளர் மற்றும் மத்திய மாகாண ஆளுநர், கல்வி அமைச்சர் ஆகியோர் இந்த அதிபர் விடுதி தொடர்பில் நடவடிக்கை எடுக்க பட வேண்டுமெனப் பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

இதனைச் சுத்தம் செய்து முறையாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால், அதிபர் விடுதியாக அல்லாமல் ஒரு வகுப்பறையாகப் பயன்படுத்தலாம் என்றும் தங்களுடைய பிள்ளைகளை அப்பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகையால் உரிய தரப்பினர் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் பெற்றோர் வலியுறுத்துகின்றனர்.

- எஸ் சதீஸ்


'SMART Chat' வாடிக்கையாளருடன்

# ஒரு மணி நேரம் திட்டம் அறிமுகம்

SLT-MOBITEL Enterprise, 'SMARTChat-வாடிக்கையாளருடன் ஒரு மணிநேரம்' என்ற புதுமையான ஈடுபாடுமிக்க கருத்தாக்கத்துடன், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைக்கு (SME) ஆதரவளிக்கும் முகமாக புதிய தளத்தை உருவாக்குகிறது. இம்முன்னோடித் திட்டம் தனிப்பட்ட வாடிக்கையாளருக்காக வடிவமைக்கப்பட்ட தொடர் ஆலோசனை அமர்வுகள் மூலம் தனிப்பயனாக்கப்பட்ட தொழில்நுட்ப வழிகாட்டலை வழங்குகிறது. இது நாட்டின் SME வணிக சமூகத்தில் டிஜிட்டல் மாற்றத்தை ஏற்படுத்த SLT-MOBITELஇன் அர்ப்பணிப்பில் குறிப்பிடத்தக்க அடுத்த கட்ட நகர்வாகும்.

SLT-MOBITELஇன் 'SMARTChat'இன் முக்கிய இலக்கானது, புதிய தொழில்நுட்பத்தை எளிதாக ஏற்றுக்கொளல், டிஜிட்டல் மயமாக்கல், வணிக வளர்ச்சி மற்றும் செலவுக் குறைப்பு ஆகியவற்றிற்கு வழிவகுக்கும் டிஜிட்டல் வெற்றிக்கான வரைபடத்தை SMEகளுக்கு வழங்குவதாகும். அவர்களின் தனித்துவமான சவால்களைஎதிர்கொள்வதற்கு மற்றும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்கு என தனிப்பயனாக்கப்பட்ட தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குவதன் மூலம் இந்தத் துறையானது டிஜிட்டல் மாற்றப் பயணத்தின் ஊடாக அவர்களின் முழுத் திறனையும் அடைய உதவும்.

இந்த SMARTChat அமர்வுகள் SMEகளுக்கு நிபுணர் ஆலோசனைக்கான பிரத்தியேக அணுகல் மற்றும் புதுமையான தீர்வுகள் மூலம் நடைமுறைப்படுத்தக்கூடிய அறிவை வழங்குகின்றன. இது பெரும்பாலும் டிஜிட்டல்மயமாக்கப்பட்ட உலகில் தங்கள் செயற்பாடுகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்த வணிகங்களிற்கு உதவும்.

இற்றை வரை, SMARTchat அமர்வுகள் கொழும்பு, கம்பஹா, காலி மற்றும் கண்டி ஆகிய இடங்களில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளன. இந்த புதுமையான முயற்சிகளால் சமூகங்கள் பயனடைவதை இந்த நிகழ்வுகள் உறுதி செய்துள்ளன. முழு நாட்டையும் உள்ளடக்கியவாறான மேலும் பல அமர்வுகள் எதிர்காலத்தில் நடாத்தப்படும்.

நிகழ்வுகளில் SMEகள் SLT-MOBITELஇன் தொழில்நுட்ப நிபுணர்களுடன் தனித்தனியாக கலந்தாலோசிக்கும் சிறப்புரிமையைப் பெற்றனர். பங்கேற்பாளர்கள் SLT-MOBITELஇன் பரந்த SME தயாரிப்புகளிலிருந்து தங்களின் குறிப்பிட்ட தேவைகளுக்குப் பொருத்தமான தீர்வுகளின் செயல்விளக்கங்களையும் பெற்றனர். இதன் மூலம் ஒவ்வொரு வணிகமும் வெற்றிபெறத் தேவையான வழிகாட்டுதலைப் பெற்றுள்ளன என்பது உறுதிசெய்யப்பட்டது.

இந்த முயற்சியானது, இலங்கையின் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய அங்கமான SME துறையுடனான தொடர்பை ஆழப்படுத்துவதற்கான SLT-MOBITELஇன் பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும். SMEகளை வலுப்படுத்துவது இறுதியில் அவர்களின் வளர்ச்சிக்கும் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கும் என்பதை SLT-MOBITEL திடமாக நம்புகிறது.

எதிர்கால SMARTChat அமர்வுகளில் பங்கேற்க ஆர்வமுள்ள SMEகள் அல்லது SLT-MOBITELஇன் SME தீர்வுகள் பற்றி மேலும் அறிய ஆர்வமுள்ளவர்கள் மேலதிக தகவலுக்கு w.w.w.bizleads.lk என்னும் இணையத்தளத்தை பார்வையிடலாம்.

'The Seasons Colombo 8'இன்

# அடிக்கல் நாட்டும் கொண்டாட்டம்




Prime Lands Residencies PLC, தனது புதிய அதி-சொகுசு நிர்மாணத் திட்டமான 'The Seasons Colombo 8' இன் அடிக்கல் நாட்டலை கொண்டாடியது. இந்த பிரத்தியேகமான அதி-சொகுசு வாழிட அனுபவத்தை வழங்கும் இந்தத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பதை அடிக்கல் நாட்டும் வைபவம் உணர்த்தியிருந்தது.

இந்நிகழ்வில், Prime Group இன் தவிசாளர் மற்றும் இணை தலைமை அதிகாரி, விசேட விருந்தினர்கள் மற்றும் பங்காளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். குரூப்பின் அதி-சொகுசு வதிவிடப் பிரிவான One Collection ஐச் சேர்ந்த விசேட சமூக அங்கத்தவராக திகழ்வதற்கான மற்றுமொரு விறுவிறுப்பான பயணமாக அமைந்திருந்தது.

துறையில் 30 வருட கால அனுபவத்தைக் கொண்டுள்ள Prime Group, உயர் தரம் வாய்ந்த செயற்திட்டங்களை பெற்றுக் கொடுத்து வீட்டு உரிமையாளர்களின் நம்பிக்கையை வென்றுள்ளது. இந்த புதிய செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் கடினமான நியமங்களை பின்பற்றி அமைந்திருக்கும் என்பதுடன், உயர் தர வடிவமைப்பு மற்றும் நிர்மாணப் பணிகளின் போது ஒவ்வொரு விவரங்களிலும் கவனம் செலுத்தல் போன்றன தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

மக்கள் செறிந்து வாழும் கொழும்பு 08 இல் சந்திரலேகா மாவத்தை மற்றும் ஃபெயார்ஃபீல்ட் கார்டின்ஸ் ஆகியவற்றுக்கிடையே அமைந்துள்ள 'The Seasons Colombo 8', 44 வசிப்பிடங்களை வழங்கும் திட்டமாகும். ஒவ்வொரு இல்லமும் 2,000 சதுர அடிப் பரப்பில் அமைந்திருக்கும். சௌகரியம் மற்றும் பிரம்மாண்டம் ஆகியவற்றை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம், நவீன வசதிகளுடன், பிரத்தியேகமான களஞ்சியப்படுத்தல் தீர்வுகளைக் கொண்ட இல்லமொன்றை கொள்வனவு செய்ய எதிர்பார்ப்போரின் சிறந்த தெரிவாக அமைந்திருக்கும்.

இந்தத் திட்டம் தொடர்பில் Prime Group தவிசாளர் பிரேமலால் பிராஹ்மனகே கருத்துத் தெரிவிக்கையில், "எமது வாடிக்கையாளர்களுக்கு செவிசாய்த்து, அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற நாம் முன்வந்துள்ளோம். அதிக இடவசதி படைத்த, சௌகரியமான வாழிட சூழலை 'The Seasons Colombo 8' வழங்குவதுடன், 44 இல்லங்களை கொண்டிருக்கும். புதிய தொழில்நுட்ப அம்சங்களைக் கொண்டு, மக்கள் செறிந்து வாழும் பகுதியில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது" என்றார்.

நிறுவனத்தின் நோக்கான அதி-சொகுசு வாழிடம் என்பதை 'The Seasons Colombo 8' பிரதிபலிப்பதாக அமைந்துள்ளதுடன், வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை விஞ்சும் வகையில் சகல அம்சங்களும் அமைந்திருக்கும். இலங்கையின் முதலாவது rooftop இல் wave pool, சகல வசதிகளையும் கொண்ட ஜிம்னாசியம், bottle bank வசதியுடன் executive lounge, கேமிங் பகுதி மற்றும் karaoke lounge, a business lounge மற்றும் சந்திப்பு அறை போன்றவற்றுடன் walking path மற்றும் yoga deck போன்ற உலகத் தரம் வாய்ந்த அம்சங்களை கொண்டிருக்கும்.

Prime Lands Residencies PLC இன் தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், 'The Seasons Colombo 8,' உடன், சொகுசு வாழிட அனுபவத்தை நாம் மாற்றியமைக்க முன்வந்துள்ளதுடன், கொழும்பின் வளர்ந்து வரும் ரியல் எஸ்டேட் சந்தையில் நீண்ட கால அடிப்படையிலான பெறுமதி வாய்ந்த சொத்தை எதிர்பார்ப்பவருக்கு அதிசிறந்த முதலீட்டு வாய்ப்பை பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளோம்.

# தணல்




இந்த
கார்த்திகை
மட்டும்
ஏன்
இப்படி
எரிகிறது

ஒருவரின்
இல்லாமைக்கு
இத்தனை
சக்தியா


துயிலும்
இல்லங்கள்
யாவும்
தூர்வாரப்படின்

பெருங்
கோடையாகி
போகும்

தேசத்தின்
தாகமும்
அவர்களின்
தேகமும்

– அ.விமலஷாந்தன்
(திருமலைசிட்டு)

# தீயிலிட்டு விடு

இல்லாமல் போன
பண்டிகை ஒன்றுக்காக
இன்னும் இருக்கின்றன
பட்சணங்கள்
தீபங்கள்
ஒலிகள்...

இக்கணமே
இந்த மந்திர தாயத்தை
அறுத்தெறிகிறாள்...

இனி அவளுக்கான
தினங்களைஅவளே
விதி செய்வாள்...

ஒரு போகிக்கான
நிமித்தங்களில்தான்
எத்தனை புது விதிகளும்
புது மனிதர்களும்

முடிவடையாத
பண்டிகை
'தீயினுக்கிரையாகமடுத்தல்'

– லலித்தா

# எதுவரை வாழ்க்கை...

ஒரு உண்மை காதல் என்ன செய்யும்..?
ஒன்றுமே செய்யாது.
எது நடந்த போதும்..?
ஒன்றும் செய்யாது.
கொஞ்சமும் மாறாது.

இன்னும் இன்னும் இறுக்கிப்
பற்றியபடி அப்படியே கிடக்கும்.
உடைந்து..
நொந்து...
அழுது...
துவண்டு..
இன்னும்..இன்னும்..
கதறி..கெஞ்சி..
உருகி..உணர்வற்று...

அப்படியே மெல்ல மெல்ல
அழிவடைந்து கலைந்து
காணாமல் தான் போகும்...!

நிற்க,
இதுஎல்லாம் தாண்டி...
பிடித்ததை..
கேட்பதை..
வேண்டியதை..
போராடுவதை..
பெற்றுக்கொடுப்பதுதான்..!

'அப்படியே பற்றிக்கொள்'.
'விட்டுவிடாதே'
என வழங்கி விடுவதுதான்.
பிரியமுடன் சிரித்துக்கொண்டு
வழி விடுவதுதான்.

'அழகாய் வாழ்ந்துவிடு'
என அன்பாய் நகர்ந்து விடுவது தான்'..!
என்னைக் கேட்டால்...
இந்த இரண்டாவது வகைதான்
மெய்க் காதல் என்பேன்..!

சொல்ல வார்த்தையற்றரணம்,
வலிகளெல்லாம் எந்த
கவிதையிலும் காதலிலும்
ஒருபோதும் சேராது.
அது உரியவருக்கு மட்டுமே சொந்தம்..!

– வசுமதி திருகோணமலை



# சிவப்பணு

எனது இரவு பொழுதுகளின்
வெண்ணிலா நீ என்பேன்
ஏனெனில் எனது
இரவு பொழுதுகளுக்கு
மட்டுமே தெரியும்
நிலவொளியின் பெருமை

மறத்துப்போன என்
இதய கமலங்களை
மீட்கச் செய்தவளே
உன் ஒவ்வொரு நினைவுகளும்
என் கற்பனையின்
உயிரோட்டங்கள்

இனியும்
என் வாழ்வே வரும் சோகமா
என்றிருந்தேன் இல்லை
அதன் மறுவுருவம் நீ
வசந்தமென்றாய்
பிரிந்து சென்ற எனது
உறவுகளின் பாசங்களை
அள்ளித் தந்தாயே

ஒவ்வொரு நொடியும் சுவாசிக்கும்
எனது இதயத் துடிப்பானாய்
எனது உணர்வு
நினைவுகளின்
நாயகி நீ என்றாய்

நீ என் கனவில் தோன்றும்
ஒவ்வொரு
நொடிப்பொழுதும்
என் வாழ்வில் நிகழும்
அற்புதமே

உயிருக்குள் ஒருத்தியாய்
கலந்து விட்ட
என் இரத்தத்தின்
சிவப்பணுவே
என் இறுதி
மூச்சு நிற்கும் வரை
உன்னை என்
உயிருக்குள்
மறைத்து
வைப்பேன்...

- ஆர்.சிறி கிருஷ்ணன்






# பிரித்தானிய தமிழர் விருதுகள்–2024

பாபா லக்சி

பிரித்தானியத் தமிழர் விருதுகள் வழங்கும் விழாவானது பிரம்மாண்டமான முறையில் லண்டனில் Slough பகுதியில் அமைந்துள்ள Crystal Grand மண்டபத்தில் முதன்முறையாக சனிக்கிழமை(02) அரங்கேறியது.

இவ்விழாவில் பல நாடுகளைப் பூர்வீகமாகக் கொண்ட இங்கிலாந்து வாழ் தமிழர்களும் ஐரோப்பியத் தமிழர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்த விருது வழங்க வேண்டும் என்று எண்ணி, ஆரம்ப காலத்தில் இதற்கு வித்திட்டவர்களில் ஒருவராக இருந்த முன்னாள் Newham நகரபிதா போல் சத்தியநேசனின் மறைவு, அவர் இருக்கும்போது நடைபெறவில்லையே என்ற பெரும் கவலை, ஏனைய ஏற்பாடுகளைச் சிந்திக்க வைத்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒன்பது பிரிவுகளில் 109 விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள். அந்த வகையில், 22 வாழ்நாள் சாதனையாளர் விருதுகள், 7 ஐரோப்பிய விருதுகள், மற்றும் 80 ஏனைய விருதுகளையும் பல துறைகளில் எமக்கு முன்னோடிகளாக இருந்தவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பிரித்தானிய அரசால் வழங்கப்படும் 'ORDER OF THE BRITISH EMPIRE' விருதைப் பெற்ற கலாநிதி சபேசன் சிதம்பரநாதன் அவர்களையும், பிரான்ஸ் அரசால் வழங்கப்படும் 'WINNER OF GRAND PRIZE OF TRADITIONAL FRENCH BAGUETTE' விருதைப் பெற்ற தர்ஷன் செல்வராஜா அவர்களையும், 'B.B.C.s MASTER CHEF WINNER 2024' விருதைப் பெற்ற பிரிந்தன் பிரதாபன் அவர்களையும், பி.பி.சி. தமிழோசை புகழ் ஆனந்தி சூரியப்பிரகாசத்தையும், 84 வயது நிரம்பிய எங்கள் வானொலி அறிவிப்பாளர் N.S.லோகேஸ்வரனையும், விருது வழங்கி கௌரவித்து, இதில் அவர்களை அறிமுகப்படுத்தியது எதிர்காலத்தில் பலரை உருவாக்க ஒரு உந்து சக்தியாகப் பார்க்கிறேன்.

அனைத்து உறவுகளின் உழைப்பு அங்கே விழாவின் பிரமாண்டத்தில் காணக்கூடியதாக இருந்தது. எதிர்வரும் காலங்களில் உங்கள் எண்ணத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட அரசு விருதாக வளர வாழ்த்துக்கள்.
















## பெருந்தோட்டத் தொழிலாளர்களது



# வரலாறும் சமூக உருவாக்கமும்



பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்,
முன்னாள் ராஜதந்திரி.

**சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் கூட இவர்களது ஊதிய உயர்வுக்காக பல்வேறுபட்ட போராட்டங்கள் நடத்தப்பட்டு கொண்டு வருவதானது, இன்னும் தற்போதைய வாழ்க்கைச் செலவிற்கேற்ற ஊதியம் வழங்கப்படாமல் இருப்பதனை அவதானிக்க கூடியதாக உள்ளது.**
**இவைகள் யாவும் காலனித்துவ ஆட்சியினரின் தொடர் கதையாக நீடிப்பதனை நோக்கலாம். சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட மாற்றங்களை இன்னுமொரு கட்டுரையில் நோக்குவோம்**

(வியாழக்கிழமை (07) தொடர்ச்சி...)

துறைமுக வேலைகளிலும், போக்குவரத்து பாதைகளை செப்பனிடுவதிலும் கூட இந்தியத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

கொழும்பிலும், மலையகத்திலும் வர்த்தகத்துறை, வட்டித் தொழில் ஆகியன விரிவடைய அதிலும் இந்தியர்கள் ஈடுபட்டிருந்தனர்.

நகரங்களின் வளர்ச்சி போக்கைத் தொடர்ந்து நகர சுத்திகரிப்புத் தேவை அவசியமாகக் கருதப்பட்டது. இந்த தொழிலுக்கும் தொழிலாளர்கள் தேவைப்பட, அவர்களையும் இந்த துறையில் ஈடுபடுத்த பின்னிற்கவில்லை. பிரித்தானியர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்த மக்கள் மத்தியில் பழைய நிலப் பிரபுத்துவ சமுதாயத்தின் பண்ணை அடிமை மனோபாவமே மேலோங்கி இருந்தது.

இதனால் இவர்கள் ஒரு தனித்துவப் போக்கை மேற் கொள்ள வேண்டிய சூழ்நிலை தோட்டங்கள் அமைந்திருந்த பிரதேசங்களிலும், அவற்றை அண்மித்த பகுதிகளிலும் சிங்கள சமூகத்தவர்களும் வாழத் தான் செய்தார்கள்.

ஆனால், அவர்களுடன் இவர்களால் ஒன்றிணைந்து வாழ்வது என்பது அக்கால கட்டத்தில் சாத்தியமானதான ஒன்றாக இருந்திருக்கவில்லை.

தோட்டங்கள் புவியியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் மிகப் பெரிய இடைவெளிகளைக் கொண்டிருந்த கட்டமைப்பு, தமக்குத் தேவையான சகல பொருட்களும் இருப்பிடத்திலேயே பெற்றுக்கொள்ளும் பெருமிதப் போக்கு உடையவராக இந்த மக்கள் வாழ்ந்தனர்.

எனவே, ஏனைய பிரதேசத்து மக்களின் வாழ்க்கை பிரச்சினைகளையோ, அவர்களின் முன்னேற்றத்தையோ சிந்தியாமலும், அவைகளைப் பற்றி ஏதும் அறியாமலும் தமக்கென தனித்துவமானதோர் வாழ்க்கையை அமைத்து வாழ்ந்து வந்தனர்.

இவர்களது இன, மத, கலாசார, பொருளாதார வேறுபாடுகளும், ஏனைய வித்தியாசங்களும் இந்த நாட்டு மக்களிலிருந்து மலையகத் தமிழர்களை நன்கு வேறுபடுத்தி காட்டி இருந்தன.

மேலும், இவர்கள் இந்தியாவிலுள்ள தமது இனத்தவர்களுடேனேயே விவாகங்களையும், உறவுகளையும் கொண்டிருந்தனர். இதுவொரு தொப்புள் கொடி உறவு.

இதேவேளை, தம்மை சூழ உள்ளவர்களின் விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்ப, சந்தர்ப்ப சூழ்நிலைக்கு இணங்கி நடக்க வேண்டியவர்களாகவும் இருந்தனர்.

அன்றைய யாழ். தமிழர்களுடனும் கூட இவர்களால் இணைந்து செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் அன்று காணப்படவில்லை.

யாழ். தமிழர்களுள் பெரும்பான்மையானோர் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் கமத் தொழில், வியாபாரம், அரசு உத்தியோகம் போன்ற பல்வேறு துறைகளில் பரிணமித்திருந்ததால் அவர்களும் சிங்கள மக்களைப் போல தோட்டங்களில் கூலி ஆட்களாக வேலை செய்ய ஆர்வம் காட்டவில்லை. இவ்வாறான ஒரு தனித்த நிலைக்கு ஆளாக்கப்பட்ட அவர்களை தோட்டத்தோடு நிரந்தரமாக இணைக்கும், பிணைக்கும் ஒரு கருவியாக லயன் அமைப்புகளும் காரணமாக இருந்தன.

எனவே, இவர்கள் தோட்டத்தோடு இணைக்கப்பட்ட கொத்தடிமைத்தனம் பொருந்தியவர்களாகவும், சுதந்திரம் இன்றியும் காணப்பட்ட அதேவேளை, வெளியுலகமோ, நாட்டு நடப்பு நிலைகளோ தெரியாமல் இவர்களின் அறிவு வளர்ச்சியினை அன்றைய பிரித்தானிய நிர்வாகம் திட்டமிட்டே தடை படுத்தி வந்தது. இவர்களுக்காக கோவில்களும், மதுக் கடைகளும், அன்று அமைக்கப்பட்டன. அதேவேளை, பாடசாலைகளும், மனிதனின் அடிப்படை உரிமையான கல்வியும் இவர்களுக்கு மறுக்கப்பட்டமையானது பிரித்தானியரின் பிரித்தாளும் கொள்கையில் ஒன்று என்றால் மிகையில்லை.

இதனால் 1911இல் தோட்டப்புறத்தில் கல்வி அற்றோர்களின் விகிதம் 100% ஆக இருந்தது. கல்வி அறிவு வழங்கப்பட்டால், இந்த சமூகம் சிந்திக்கத் தொடங்கி விடும். சிந்திக்கத் தொடங்கினால் தமது ஆட்சி ஆட்டம் கண்டு விடும்.

அதனால் தான் எதிர்பார்த்த பலாபலன்களை இலங்கை போன்ற குடியேற்ற நாடுகளில் பெற முடியாமல் போய்விடும் என்ற அச்ச உணர்வே பிரித்தானியர்கள் அவர்களை தொடர்ந்து சிந்திக்காத வண்ணம் அடிமைகளாக தமது காலத்தில் வைத்திருக்க வேண்டிய சூழ்நிலையாகவும் இருந்திருக்கலாம்.

காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னரும், தொடர்ந்து இலங்கை அரசு அவர்களை கூலிகளாகவே வைத்திருக்க விரும்பியது.

எனவே, அவர்களுக்கு அரசியல் அதிகாரத்தை வழங்காமல் அவர்களது வாக்குரிமையும் திட்டமிட்டு பறிக்கப்பட்டன.

இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை வழங்குவது சம்பந்தமாக ஆராய்ந்த பொழுது சிங்கள, தமிழ் பூர்ஷ்வா தலைவர்களினது மனோ பாவம் வெளிப்படுத்தப்பட்டது அனைவரும் அறிந்த வரலாறு.

மலையகத் தமிழர்களின் அரசியல் பலம் அதிகரித்தால் இலங்கையில் வாழும் இந்திய பூர்ஷ்வாக்களின் செல்வாக்கு அதிகரிக்கும் என அஞ்சியதால் ஏற்பட்ட விளைவே வாக்குரிமை பறிப்பு. வாக்குரிமை பறிக்கப்பட்டதனால் அந்த மக்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டன.

வாக்குரிமை இன்மையினால் அரச தொழில் வாய்ப்புக்கள், தமக்குத் தேவையான குறைந்த பட்சம் ஒரு வீட்டைக் கட்டிக் கொள்வதற்கான காணிகளைக் கூட கொள்வனவு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டன.

கல்வி ரீதியாக அக்காலத்தில் நிலவிய ஐந்தாம் வகுப்பு புலமைப் பரீட்சைகளில் தோற்றுவதற்குக் கூட பிரஜாவுரிமை இன்மை ஒரு தடையாக இருந்தது. இதனால், சிறு பராயத்தில், கல்வி கற்று முன்னேற வேண்டும், பெரிய பாடசாலைகளுக்கு சென்று கல்வி கற்க வேண்டும் என்ற பல மாணவச் செல்வங்களினது கனவுகள், கனவுகளாகவே கரைந்து விட்ட சம்பவங்கள் காலத்தின் கோலங்கள்.

ஏன்? அன்றைய கால கட்டங்களில் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்க, ஏனைய மாணவர்களை விட, மேலதிகமான கொடுப்பனவை செலுத்த வேண்டிய துர்பாக்கிய நிலைமை அன்று இருந்தது. பின்னாளில் இவ்வாறான கல்வி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்பட்டமையை பாராட்டித் தான்ஆக வேண்டும். இதுவொரு சிறப்பான அம்சமும் கூட.

இவ்வாறாக பல வழிகளிலும் துண்டிக்கப்பட்ட தனித்துவமான கலை, கலாசார, சமூக, அரசியல் பிரதிபலிப்புகளைக் கொண்டவொரு தொழிலாள வர்க்கமாக ஆரம்ப கால கட்டங்களில் இந்த பெருந் தோட்டத் தொழிலாளர்கள் காணப்பட்டிருந்தது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கடந்த காலங்களில் இந்த மக்கள் எந்த அளவிற்கு ஏனைய பிரதேச சமூகங்களில் இருந்து பின்னோக்கிய நிலையில் வாழ்ந்து வந்திருந்தனர் என்பதனை தெளிவாக அவதானிக்க முடியும்.

19ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷார் தேயிலையை அறிமுகப்படுத்திய பொழுது, ஏற்கெனவே நிலவிய ஜீவாதார விவசாயத்திற்கு எதிரிடையாய் உள்ள தோட்டத் தொழில் அமைப்பு கூலித் தொழிலையும், பெரிய தோட்டங்களின் உற்பத்திச் சாலை மாதிரி இயக்கத்தையும், விசேஷ சந்தைக்கான உற்பத்தியையும், அடியொற்றியதாக இருந்துள்ளது.

ஆரம்பத்தில் இது குறைந்தளவிலான அந்நிய மூலதனத்தை அடியொற்றியதாக இருந்ததுடன், இக்கைத்தொழில் ஐரோப்பிய கேந்திர நிலையங்களுக்கு நிரம்பல் செய்வதற்காக 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய கரத்தல் கைத்தொழில் வர்க்கத்தை ஒத்ததாக இருந்துள்ளது.

மிகக் குறைந்ததொரு மூலதனத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இப் பொருளாதாரத்தின், தொடர்ந்து வந்த வளர்ச்சி, நாட்டுக்குள்ளேயே உத்வேகப்படுத்தப்பட்ட பாரிய அளவிலான மேலதிகத்தினால் ஏற்படுத்தப்பட்டதாகும்.

பெயரளவிலான முதலீட்டுக்கு ஈடு செய்யக் கூடிய அளவிற்கு மேலானதாக நிறைந்த இலாபத்தைக் கொடுப்பதற்கு இந்த மேலதிகம் போதுமானதாக இருந்திருந்தது. இந்த மாற்றங்கள் தோட்டத் தொழில் துறை நடவடிக்கைகளை தழுவிய ஒன்றாக, நாட்டினது பொருளாதாரத்தை முற்றாகப் புனரமைப்புச் செய்யும் ஒரு நிலையை உண்டாக்கின.

இங்கு நிறுவப்பட்ட அந்நிய வங்கிகள் இக் கைத்தொழிலுக்கு பணமிடுவதையே பிரதான கடமையாகக் கொண்டிருந்தன. இதனால், இந்த வங்கிகளுக்கு பாரியளவு இலாபங்கள் சேர்ந்தன. தோட்டத் தொழில் துறை உற்பத்திச் சாலைகளின் பொறியியல் தேவைகளுக்கு உதவக் கூடியதாக பொறியியல் நிறுவனங்களும், தொழிற்சாலைகளும் தோன்றின. புகையிரதப் பாதைகளையும், தெருக்களையும், பராமரிப்பதற்கென அரசாங்கம் பொறியியல் நிறுவனங்களைத் தோற்றுவித்தது.


வேதன வேறுபாடுகள், வாழ்க்கை மாதிரிகள், ஆடை அணிகலன்கள், உறவுகள் என்பவற்றைப் பொறுத்தவரையில் "உயர்ந்த கோபுரங்களையும் தாழ்ந்த குடிசைகளையும்" கொண்ட ஓர் அமைப்பாகவே அந்தக் காலத்தில் இருந்து வந்திருக்கின்றது. இந்த கோபுரங்களின் அடிமட்டத்தில் தென்னிந்திய வழித்தோன்றலான தொழிலாள வர்க்கத்தினர் இருந்து வந்திருக்கின்றனர்.

இவ்வாறாக பெருந்தோட்ட தொழிலாளர்கள் வாழ்க்கை முறைமையானது பிரித்தானியர் காலகட்டத்தில் இருந்துள்ளதானது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் கூட இவர்களது ஊதிய உயர்வுக்காக பல்வேறுபட்ட போராட்டங்கள் நடத்தப்பட்டு கொண்டு வருவதானது, இன்னும் தற்போதைய வாழ்க்கைச் செலவிற்கேற்ற ஊதியம் வழங்கப்படாமல் இருப்பதனை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இவைகள் யாவும் காலனித்துவ ஆட்சியினரின் தொடர் கதையாக நீடிப்பதனை நோக்கலாம். சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட மாற்றங்களை இன்னுமொரு கட்டுரையில் நோக்குவோம்.

(முற்றும்)

# பரதநாட்டிய பாராயணம்






















சுவாமி விவேகானந்த கலாசார நிலையமும், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த குமாரி பவித்ரா லிகேந்திராவின் பரதநாட்டிய பாராயணம், கொழும்பு சுவாமி விவேகானந்த கலாசார நிலையத்தில் நவம்பர் 5ஆம் திகதியன்று நடைபெற்றது. இவர் சென்னை கலாஷேத்திராக் கலைக்கல்லூரியின் முன்னாள் மாணவியும், வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் பரத முதுகலை பட்டப்படிப்பினைத் தொடரும் மாணவியும், பண்பட்ட நடனக் கலைஞரும், ஆசிரியையும் ஆவார்.














காஷ்மீர்


காஷ்மீரில்

## 5,000 பேருக்கு டெங்கு

காஷ்மீரில் சுமார் 5,000க்கும் மேற்பட்டோர் டெங்குகாய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி அவர்கள் மேலும் கூறுகையில், "நோய்ப் பாதிப்பு அதிகரிக்கலாம், ஆனால், நிலைமை கட்டுக்குள் உள்ளது. இதுவரை, 27,809 பேருக்கு டெங்கு பரிசோதனை நடத்தப்பட்டுள்ளன.

அதில், 5,009 பேருக்கு டெங்கு பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 5,009 பேரில், 425 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். டெங்கு பாதிப்புக்கு ஆளான நோயாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்" என்றுள்ளனர்.



அமெரிக்கா

## ட்ரம்ப்பின் முதல் உரையாடல் மோடியுடன்


உலகத் தலைவர்களில் பிரதமர் மோடியுடன் தான் எனது முதல் உரையாடல் அமைந்துவிட்டது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப்புடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி, 'எக்ஸ்' வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், "எனது நண்பர் ட்ரம்ப்புக்கு வாழ்த்து தெரிவித்தேன். விண்வெளி, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்த, ட்ரம்ப்புடன் இணைந்து பணிபுரிவதை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன்" என பதிவிட்டுள்ளார்.

இது குறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, மேற்கண்டவாறு ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், "உலகம் முழுவதும் பிரதமர் மோடியை விரும்புகிறது. இந்தியா மாபெரும் தேசம். பிரதமர் மோடி மகத்தான மனிதர். பிரதமர் மோடியை உண்மையான நண்பராகக் கருதுகிறேன்" என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா

வெள்ளை மாளிகையில்

## ஆவிகளின் நடமாட்டம்?

18ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட வெள்ளை மாளிகை கட்டிடத்தில், முன்னாள் ஜனாதிபதிகளின் ஆவிகள் உலாவுவதாகவும் இரவு நேரத்தில் மர்ம சப்தம் எழுகிறது என்றும் பல கதைகள் கூறப்பட்டு வந்த நிலையில், தற்போது மீண்டும் இந்த கதை இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

16ஆவது ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் மற்றும் அமெரிக்காவின் 2ஆவது முதல் பெண்மணியான அபிகெயில் ஆடம்சி ஆகியோரின் ஆவிகளே, வெள்ளை மாளிகை கட்டிடத்தில் உலாவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி 'வொஷிங்டன் போஸ்ட்' வெளியிட்டுள்ள செய்தியில், 3ஆவது ஜனாதிபதி தாமஸ் ஜெபர்சன் உட்பட இதற்கு முன்னால், வெள்ளை மாளிகையில் வசித்த பலரும் பேயை எதிர்கொண்ட பல விடயங்கள் கூறப்படுகின்றன.

எனினும், ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் ஆவி வெள்ளை மாளிகையில் உலவுகிறது என்று பரவலாக நம்பப்படுகிறது. இதுபற்றி 1946ஆம் ஆண்டு ஜனாதிபதி ஹாரி எஸ். ட்ரூமேன், அவருடைய மனைவிக்குக் கடிதம் ஒன்றை எழுதினார். அந்த கடிதம் அவருடைய ஜனாதிபதி நூலகம் மற்றும் மியூசியத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இதுபற்றி 'யு.எஸ்.ஏ. டுடே' பத்திரிகை வெளியிட்ட செய்தியில், சந்தேகமேயின்றி, வெள்ளை மாளிகையில் 16ஆவது ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் ஆவியே சுற்றி வருகிறது என தெரிவிக்கின்றது. 1865ஆம் ஆண்டு அவர் சுட்டு படுகொலை செய்யப்பட்ட பின்னர், லிங்கனின் ஆவி, 'எல்லோ ஓவல்' அறை மற்றும் லிங்கனின் படுக்கையறையில் தோன்றியுள்ளது என கூறப்படுகிறது.

ஜனாதிபதி கால்வின் கூலிட்ஜின் மனைவி கிரேஸ் கூலிட்ஜ், இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் மற்றும் நெதர்லாந்து ராணி வில்ஹெல்மினா ஆகிய பிரபலங்களுக்கு லிங்கன் தெரிந்துள்ளார்.

இதேபோன்று, வெள்ளை மாளிகையில் வசித்தவர்கள் மற்றும் பணியாளர்கள் பல தருணங்களில், அமெரிக்காவின் 2ஆவது முதல் பெண்மணியான அபிகெயில் ஆடம்சின் ஆவியை பார்த்தோம் என கூறியுள்ளனர்.




இங்கிலாந்துக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகள்

இங்கிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை மேற்கிந்தியத் தீவுகளும், இரண்டாவது போட்டியை இங்கிலாந்தும் வென்ற நிலையில் பார்படோஸில் புதன்கிழமை (06) நடைபெற்ற மூன்றாவது போட்டியில் வென்றதன் மூலமே 2-1 என்ற ரீதியில் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் ஷே ஹோப், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து ஆரம்பத்தில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறினாலும் பில் ஸோல்டின் 74 (108), டான் மௌஸ்லியின் 57 (70), சாம் கர்ரனின் 40 (52), ஜொஃப்ரா ஆர்ச்சரின் ஆட்டமிழக்காத 38 (17), ஜேமி ஒவெர்ட்டனின் 32 (21) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 263 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மத்தியூ போர்ட் 3, அல்ஸாரி ஜோசப் மற்றும் றொமாரியோ ஷெப்பர்ட் ஆகியோர் தலா 2, றொஸ்டன் சேஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 264 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், கேசி கார்ட்டியின் ஆட்டமிழக்காத 128 (114), பிரண்டன் கிங்கின் 102 (117) ஓட்டங்களோடு 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் ஜேமி ஒவெர்ட்டன், றீஸ் டொப்லி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக கிங்கும், தொடரின் நாயகனாக போர்ட்டும் தெரிவாகினர்.



முதலாவது போட்டியில்

## பங்களாதேஷை வீழ்த்திய ஆப்கானிஸ்தான்

பங்களாதேஷுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், ஷார்ஜாவில் புதன்கிழமை (06) நடைபெற்ற முதலாவது போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான்: 235/10 (49.4 ஓவ.) (துடுப்பாட்டம்: மொஹமட் நபி 84 (79), ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி 52 (92) ஓட்டங்கள். பந்துவீச்சு: தஸ்கின் அஹ்மட் 4/53, முஸ்தபிசூர் ரஹ்மான் 4/58, ஷொரிஃபுல் இஸ்லாம் 1/32)

பங்களாதேஷ்: 143/10 (34.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 47 (68), சௌமியா சர்கார் 33 (45) ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்லாஹ் மொஹமட் கஸன்ஃபார் 6/26, ரஷீட் கான் 2/28, அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 1/16, மொஹமட் நபி 1/23)

போட்டியின் நாயகன்: அல்லாஹ் மொஹமட் கஸன்ஃபார்





பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

## நான்காமிடத்துக்கு முன்னேறிய ஷகீன் ஷா அ∴ப்ரிடி

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் நான்காமிடத்துக்கு பாகிஸ்தானின் ஷகீன் ஷா அஃப்ரிடி முன்னேறியுள்ளார்.

ஏழாமிடத்தில் காணப்பட்ட ஷகீன், அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது போட்டியில், 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே மூன்று இடங்கள் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவைரிசை பின்வருமாறு, 1.கேஷவ் மஹராஜ் 2.ரஷீட் கான் 3.குல்தீப் யாதவ், 4.அடம் ஸாம்பா, ஷகீன் ஷா அஃப்ரிடி, 6.பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ், 7.ஜொஷ் ஹேசில்வூட், 8.ஜஸ்பிரிட் பும்ரா, 9.ட்ரெண்ட் போல்ட், 10.மொஹமட் சிராஜ்.



சம்பியன்ஸ் லீக்:

## ஆர்சனலை வென்ற மிலன்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் வியாழக்கிழமை (07) நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலுடனான போட்டியில், 1-0 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் வென்றது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹகன் கல்ஹனொக்லு பெற்றிருந்தார்.

இதேவேளை பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-1 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட் வென்றது. அத்லெட்டிகோ சார்பாக நவெல் மொலினா, ஏஞ்சல் கொரேரா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாகப் பெறப்பட்ட கோலை வொரென் ஸகிர்-எம்ரி பெற்றார்.

நியூசிலாந்துக்கெதிரான தொடருக்கான

## இலங்கைக் குழாமில் குசல் பெரேரா

நியூசிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கையின் குழாமில் குசல் பெரேரா, மொஹமட் சிராஸ் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

குழாம்: சரித் அசலங்க (அணித்தலைவர்), அவிஷ்க பெர்ணாண்டோ, பதும் நிஸங்க, குசல் மெண்டிஸ், குசல் பெரேரா, கமிந்து மெண்டிஸ், ஜனித் லியனகே, சதீர சமரவிக்கிரம, நிஷான் மதுஷ்க, டுனித் வெல்லலாகே, வனிது ஹசரங்க, மகேஷ் தீக்ஷன, ஜெஃப்ரி வன்டர்சே, சமிந்து விக்ரமசிங்க, அசித பெர்ணாண்டோ, டில்ஷான் மதுஷங்க, மொஹமட் ஷிராஸ்.



இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளுக்கான குழாம்: சரித் அசலங்க (அணித்தலைவர்), பதும் நிஸங்க, குசல் மெண்டிஸ், குசல் பெரேரா, கமிந்து மெண்டிஸ், தினேஷ் சந்திமால், அவிஷ்க பெர்ணாண்டோ, பானுக ராஜபக்ஷ, வனிது ஹசரங்க, மகேஷ் தீக்ஷன, டுனித் வெல்லலாகே, ஜெஃப்ரி வன்டர்சே, சமிந்து விக்ரமசிங்க, நுவான் துஷார, மதீஷ பத்திரண, பினுர பெர்ணாண்டோ, அசித பெர்ணாண்டோ.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 08 நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.